சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.

நாள். 22.07.2024

Case No.OS.54/2023

P.W.1

திரு.பொன்ராணி

<u>குறுக்குவிசாரணை.</u>

1. வா.சா.ஆ.4 உயில் ஆவணம் செல்லாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.
2. வா.சா.ஆ.4 உயில் ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள க.எண்.8 வீட்டில் தான் பாக்கியத்தம்மாள் அவரது கடைசி காலம் வரை குடியிருந்து வந்தார் என்றால் சரிதான்.
3. வா.சா.ஆ.4 உயில் ஆவணத்தில் பொன்ராணி வீட்டுக்குதெற்கு என குறிப்பிடப்பட்டுள்ள எல்கை மாலில் பொன் ராணி நான்தான்.
4. வா.சா.ஆ.4 உயில் ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள க.எண்.8 வீட்டை இரண்டு பாகங்களாகப் பிரித்து தென்பகுதி வீட்டில் பாக்கியத்தம்மாள் குடியிருந்து வந்தார், வடபகுதி வீட்டில் நாங்கள் குடியிருந்து வந்தோம்.
5. வா.சா.ஆ.4 உயில் ஆவணத்தின் அசல் என்னிடம் தான் உள்ளதா என்றால் இல்லை.
6. வா.சா.ஆ.4 உயில் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாக்கியத்தம்மாள் தனது கடைசி காலத்தில் நடமாட முடியாமல் படுக்கையில் கிடந்தார். வயது மூப்பின் காரணமாக அவரால் நடக்க முடியவில்லை என்றால் சரிதான்.
7. என் மாமா இறப்பிக்கு பின்பு பாக்கியத்தாய் உடன் ஜெயமாணிக்கம் தான் இருந்துவந்தார் என்றால் நான் தான் பாக்கியத்தாய் அம்மாளை இறுதிவரை பார்த்துக்கொண்டேன் ஜெயமாணிக்கமும் உடனிருந்தார்.
8. பாக்கியத்தாய்க்கு இரண்டு புதல்வர்கள் என்றால் சரிதான்.
9. நான் பாக்கியத்தாயின் மகனான பேசில் தியாகராஜன் என்பவரது மகள்

ஆவேன்.

10. வழக்கின் 6 முதல் 9 பிரதிவாதிகள் ஜெயமாணிக்கத்தின் வாரிசுகள் என்றால் சரிதான்.

11. 5வது பிரதிவாதி வளர்மதி பாக்கியத்தாயின் மகன் வழிப்பேத்தி என்றால் சரிதான்.

12. 13.04.2006 அன்று நான் வீட்டில் இருந்தேனா என்று எனக்கு நியாபகம் இல்லை.

13. வா.சா.ஆ.4 உயில் ஆவணத்தில் 1வது சாட்சி பெருமாள் 2ம் பிரதிவாதியின் கணவர் ஆவார்.

14. வா.சா.ஆ.4 உயில் ஆவணத்தில் 2வது சாட்சி முத்தையா 5ம் பிரதிவாதியின் கணவர் ஆவார்.

15. அமுதா இறப்பிக்கு பின்பு அவரது பாட்டியான பாக்கியத்தாய்தான் வளர்த்து வந்தார்என்றால் சரிதான்.

16. 5வது பிரதிவாதி வளர்மதி பாக்கியத்தம்மாளும் அவரது கணவரும் சேர்ந்துதான் திருமணம் செய்துவைத்தார்கள் என்றால் சரிதான்.

17. வா.சா.ஆ.4 உயில் ஆவணமானது பாக்கியத்தாய்அம்மாள் நல்ல சுயநினைவுடன் ஆரோக்கியமான மனநிலையுடன் சுயார்ஜிதமாக 13.04.2006 ஏற்படுத்திய உயில் சாசனம் என்றால் சரியல்ல.

18. நானும் பாக்கியத்தாய் அம்மாளும் ஒரே வீட்டில் குடியிருந்த காரணத்தினால் வா.சா.ஆ.4 உயில் ஆவணம் பற்றி எங்களுக்கு அது ஏற்பட்ட காலத்திலிருந்தே தெரியும் என்றாலும் சரியல்ல.

19. வா.சா.ஆ.4 உயில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள க.எண்.8 வீட்டின் வடபகுதியை இடித்து புதிதாக நான் கட்டிடம் எழுப்பியுள்ளேன் என்று சொன்னால் அந்த கட்டிடத்தை என் மகள் தான் கட்டினார்.

20. மேற்சொன்ன புதுவீட்டிற்கான நிலப்பரப்பை ஜெயமாணிக்கத்திடம் இருந்துதான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

21. வழக்கு சொத்தின் 1வது தபசில் 1வது இலக்க சொத்தும் 3வது தபசில் சொத்தின் கிழக்கு பகுதி சொத்தும் வா.சா.ஆ.4 உயில் ஆவணத்தின் படி

ஜெயமாணிக்கத்திற்குத்தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

22. வழக்கு சொத்தின் 1வது தபசில் 1வது இலக்க சொத்தும் 3வது தபசில் சொத்தின் கிழக்கு பகுதி சொத்தும் வா.சா.ஆ.4 உயில் ஆவணத்தின் படி ஜெயமாணிக்கத்திற்குத்தான் பாத்தியப்பட்டது என்பதால் அவர் இறக்கும்வரை அந்த சொத்துக்களை உரிமையாளர் என்ற கோதாவில் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல.

23. அதேபோல் வா.சா.ஆ.4 ஆவணத்தின் படி கிடைக்கப்பெற்ற சொத்துக்களை ஜெயமாணிக்கத்தின் காலத்திற்குப்பிறகு அவரது வாரிசுகளான 6 முதல் 9 பிரதிவாதிகள் வாரிசுமுறையில் அடைந்து உரிமையுடன் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

24. 6 முதல் 8 பிரதிவாதிகள் மேற்சொன்ன சொத்துக்களை தங்களுக்குரிய பாகத்தை 9வது பிரதிவாதிக்கு தான செட்டில்மன்ட் ஆவணம் முலமாக பாத்தியப்படுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

25. 1வது தபசில் 3வது இலக்க சொத்தில் 5 சென்ட் நிலம் 5வது பிரதிவாதி வளர்மதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

26. 2வது தபசில் சொத்து 2வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

27. 1வது தபசில் 2வது இலக்க சொத்தில் உள்ள 8 சென்ட் நிலத்தில் பிரிவின்றி 6 சென்ட் சொத்திற்குத்தான் வழகுகு தாக்கல் செய்துள்ளதால் அந்த சொத்தின் ஏனைய உரிமையாளர்களை தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

28. 1வது தபசில் 1வது இலக்க சொத்தைப் பொறுத்து எனது கணவர் தியாகராஜனுக்கு அவரது தயாரான பாக்கியத்தாய் அம்மாள் ஒதுக்கிக் கொடுத்துவிட்டார் என்று பிராதிலும் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

29. அதேபோல் அந்த சொத்துக்களை தியாகராஜன் உயிரோடு இருக்கும் வரை அனுபவித்து வந்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

30. அதேபோல் பாக்கியத்தாய் அம்மாள் 01.06.1989 அன்று ஒருபதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் மூலம் தியாகராஜனுக்கு பாத்தியப்படுத்தியுள்ளார் என்று வழக்கில் குறிப்பிட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல.

31. பாக்கியத்தாய் அம்மாள் எந்த காலத்திலும் என் கணவருக்கு கிரைய ஒப்பந்தம்

ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

32. எனது கணவர் காலமான பின்பு 1வது தபசில் சொத்து அவரது வாரிசு நிலையில் எங்களுக்கு பாத்தியப்பட்டு நாங்கள் அனுபவித்து வருவதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

33. நாங்கள் தபசில் சொத்துக்களில் கருவேல மரங்கள் நட்டு பராமரித்து வருவதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

34. வா.சா.ஆ.4 உயில் ஆவணம் உண்மையான ஆவணம் என்பது எனக்கு நன்றாக தெரிந்திருந்த காரணத்தினால் தான் கடந்த 14 வருங்களாக அந்த ஆவணத்தை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்யாமல் இருந்து வந்தோம் என்றால் சரியல்ல.

35. என் கணவர்தான் பாக்கியத்தாய் அம்மாள் தான் பராமரித்து வந்தார் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

36. 6 முதல் 9 பிரதிவாதிகள் 2009 ல் வழக்கு சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்தார்கள் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

37. பாக்கியத்தாய் அம்மாள் அரசு மாணியம் பெரும் பள்ளியில் ஆசிரியராக இருந்து பணி ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான்.

38. பாக்கியத்தாய் அம்மாளின் இறப்பிற்கு பிறகு அவரது இறப்பிற்கான பணி சம்பந்தப்பட்ட இழப்பிடுகளை ஜெயமாணிக்கம் தான் பெற்றார் என்று சொன்னால் சரிதான்.

39. பாக்கியத்தாய் அம்மாளின் இறப்பிற்கு பிறகு வங்கியில் இருந்த தொகைகளை ஜெயமாணிக்கம் தான் பெற்றார் என்று சொன்னால் அதுபற்றி எனக்குத்தெரியாது.

40. வா.சா.ஆ.4 உயில் ஆவணத்தின் அடிப்படையிலேயே பாக்கியத்தாய் அம்மாளின் இறங்பு இழப்பீடும் வங்கி சேமிப்பு தொகைகளையும் ஜெயமாணிக்கம் தான் பெற்றார் என்று சொன்னால் அதுபற்றி எனக்குத்தெரியாது.

41. வா.சா.ஆ. 4 உயில் ஆவணமானது சார்பதிவாளருடன் கூட்டு சதி செய்து ஜெயமாணிக்கத்தால் ஏற்படுத்தப்பட்ட போலி ஆவணம் என்று வழக்கில் குறிப்பிட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல.

42. வா.சா.ஆ. 4 உயில் ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை பாக்கியத்தாய் அம்மாள் ஏற்கனவே என் கணவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

43. வா.சா.ஆ. 4 உயில் ஆவணம் பற்றி அது ஏற்பட்ட காலத்திலிருந்தே

எனக்கு தெரியும் என்றாலும் பிரதிவாதி தரப்புவழக்கறிஞர் அறிவிப்புக்கு பின்தான் எங்களுக்கு தெரிய வந்தது என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

44. 1வது தபசில் சொத்தைப்பொறுத்து பிராதில் கோரப்பட்டுள்ள விளம்புகை பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

45. வா.சா.ஆ. 4 உயில் ஆவணத்தில்கண்டுள்ள சொத்துக்கள் குறித்து எங்களுக்கு வழக்கில் எந்தவொரு பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/–கே.நம்பிராஜன்

**சார்பு நீதிபதி,**

**திருவைகுண்டம்**